FWC

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, யூன் - 2016

## Term Examination, June - 2016

| தரம் :- 13 (2016) | தமிழ் – I | மூன்று மணித்தியாலங்கள் |
| --- | --- | --- |

அறிவுறுத்தல்கள் :-

**பகுதி I இல் உள்ள இரு வினாக்களுக்கும், பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கும் எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

### பகுதி - I

01) மேல்வரும் செய்யுட்களை வாசித்து அவற்றின் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

i)
பாணன் சூடிய பசும் பொற்றாமரை
மாணிழை விறலி மாலையொடு விளங்க
கடும்பரி நெடுந்தேர் பூட்டு விட்டசைஇ.
ஊரீர் போலச் சுரத்திடை யிருந்தனிர்
யாரீரோ வென வினவலானாய்
காரெ னொக்கற் கடும்பசி யிரவல
வென் வேலண்ணற் காணா வூங்கே
நின்னனும் புல்லியோமன்னே யென்றும்
உடாஅ போராஅ வாகுதலறிந்தும்
படாஅ மஞ்சைக்கு ஈத்த வெம்கோ
கடாயானைக் கலிமான் பேகன்
எத்துமணையாயினும் ஈத்தல் நன்றென
மறுமை நோக்கிற்றோ வன்றே
பிறர் வறுமை நோக்கின்றவன் கைவண்மையே.

அ) புரவலினிடம் பொருள் பெற்ற பாணனின் செல்வச் செழிப்பு விபரிக்கப்படுமாற்றினைக் குறிப்பிடுக.

ஆ) இச்செய்யுளில் குறிப்பிடப்படும் அரசனது கொடைச்சிறப்பு எத்தன்மையானது என்பதைத் துலக்குக.

இ) இச்செய்யுளில் இடம்பெற்றுள்ள புறத்திணைப் பொருள் மரபினை தெளிவுபடுத்துக.

ஈ) பேகனிடம் கொண்ட ஈடுபாட்டைப் புலவர் வெளிப்படுத்தப்படுமாற்றினை எடுத்துக் காட்டுக.

ii)
இப்பொழு தெம்ம னோரா லியம்புதற் கெளிதே யாரும்
செப்பருங் குணத்திராமன் திருமுகச் செவ்வி நோக்கில்
ஒப்பதே முன்பு பின்பவ் வாசக முணரக் கேட்ட
அப்பொழு தலர்ந்த செய்தாமரையினை வென்றதம்மா!

அ) இப்பாடல் இடம்பெறும் சந்தர்ப்பத்தை விளக்குக.

ஆ) ‘இப்பொழுது எம்மனோரால் இயம்புதற் கெளிதே’ இப்பாடல் வரியினூடாக கவிஞனது மனநிலையை விளக்குக.

இ) இச்செய்யுளில் இடம்பெற்றுள்ள உவமான உவமேயங்களை எடுத்துக் காட்டுக.

ஈ) இவ்வுவமையினூடாக கவிஞர் உணர்த்த விரும்பிய செய்தி என்ன?

02) 'அ' பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

**அல்லது**

'ஆ' பகுதியிலுள்ள உரைப் பகுதியைப் படித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

அ) **சூரியகாந்தி**

ஆகாய வீதியுலாவி வருமிந்த
ஆதித்தனோ உனதன்பனடி
வேகாமல் வெந்து வெயிலில் உலர்ந்து நீ
விண்ணிலே கண்ணாக நிற்பதேனோ.

பொன்னிற முண்டு பொலிவுண்டு கண்டுனைப்
போற்ற இனிய வடிவமுண்டு
என்ன அரிய வரம்பெற இன்னும் நீ
இத்தவம் செய்வது பூமகளே.

காயும் கதிரவன் மேனியை நோக்க உன்
கண்களும் கூசிக் கலங்காவோ
நேயம் மிகுந்தவர் கால வருத்தம்
நினைப்பதும் இல்லையோ சொல்லடியே.

காலையில் கதிர் வீசிவர நிதம்
கண்டு களித்து மகிழ்ந்திடும் நீ
மாலையிலே முகம் வாடித் தளர்ந்திட
வந்த வருத்தமும் ஏதடியோ

செங்கதிர் செல்லும் திசையது நோக்கி - உன்
செல்வமுகம் திரும்புவதேன்
மங்கையே உன் மணவாளனாகில் அவன்
வார்த்தை யொன்று சொல்லி போகானோ?

ஆசை நிறைந்த உன் அண்ணலை நோக்கிட
ஆயிரம் கண்களும் வேண்டுமோடி
பேசவும் நாவெழவில்லையோடி - கொஞ்சம்
பீத்தற் பெருமையும் வந்ததோடி.

மஞ்சள் குளித்து முகமினுக்கி - இந்த
மாயப் பொடி வீசி நிற்கும் நிலை
கஞ்ச மகள் வந்து காணில் சிரிக்குமோ
கண்ணீர் உருக்குமோ யாரறிவார்.

உன் பெயர் சூரியகாந்தி என்றார் - அதன்
உண்மையும் இன்றே அறிந்து கொண்டேன்
இன்பம் அளித்திடும் பூவுலகத்துனக்கு
யாரும் இணையில்லை இல்லையம்மா!

1) இச்செய்யுளில் சூரியகாந்திப் பூவின் அழகு பற்றி கவிஞர் கூறுவதை எடுத்துக் காட்டுக.
2) காதல் வயப்பட்ட ஒரு பெண் தலைவன் மீது கொண்ட அன்பு வெளிப்படுமாற்றினை விளக்குக.
3) சூரியகாந்திப் பூவின் அழகை வெளிப்படுத்துவதற்கு கவிஞர் கையாண்ட அணிகளை எடுத்துக் காட்டுக.
4) 'கஞ்சமகள் வந்து காணில் சிரிக்குமோ கண்ணீர் உருக்குமோ? என்பதனூடாக கவிஞரது நிலைப்பாட்டை விளக்குக.

ஆ) எலி வளைகளாக இரு அறைகளைக் கொண்ட குடிசை ஈயெறும்பு தானும் நுழையாதவாறு இறுக்கக் கட்டிய கிடுகுச் செத்தையையே சுவராகக் கொண்ட குடிசையின் கர்ப்பக் கிரகத்தினுள் பக்குவமடைந்த மகள் என்னதான் அவல வாழ்க்கை வாழ்ந்தாலும் பக்குவமடைந்த குமரை கட்டுக்காவலாகத்தானே வைத்திருக்க வேண்டும். மற்ற அறையில் முன்பக்கம் முழுமையாகவும், மற்றிரு பக்கமும் மேல் அரையளவுக்குள்ள காலதர் வழியே வெண்பஞ்சாக துமிக்கும் பனித்திவலைகள் உள்நுழைந்து மயிர் கால்களைத் துளைப்பதில் நின்றும் பாதுகாப்பு பெறுவதற்காய் சாரனெனும் கருப்பையுள் சிசுவாக முடங்கிக் கிடந்தனர் தந்தையும் தனயனும். வாழ்க்கை முழுக்க கும்பகர்ண வரம் தங்கி விட்டால் எவ்வளவு சௌகரியப்படும் என்பது போலிருந்தது அவர்கள் தோற்றம். பசியின் அழுங்குப் பிடியில் வெறி முற்றிவிட்ட புலியின் நகங்களாக மனத்தை வராண்டும் அவசங்களையம் குசேல காண்டப் பாராயணத்தையும், மறந்த நிம்மதியின் பேராட்சி அவர்களில்.

ஒட்டுத் திண்ணையில் ஈர விறகுகளோடு நடாத்திய மடைப்பள்ளிப் போரை நிறுத்திவிட்டு குப்பி விளக்குடன் நெருங்கி வந்தாள் ஹலீமா. அங்குசத்தின் பிரயோகத்தில் அடங்கி இயங்கும் யானையாக கரீம் வாரிச் சுருட்டி எழுந்தான். மகனையும் எழுப்பினான். கரித்துணிக்கைகளை அசைபோட்டு பல்துலக்கி அவள் தயாராய் வைத்திருந்த வெந்நீரில் முகம் அலம்பினார்கள். இலங்கை ஆலைகளின் உலக சாதனையான ஊசல் மணக்கும் ஊசலரிசிப் பழஞ்சோறும் சூடு காட்டிய மட்டிச் சதைப் பழங்கறியும் நிசிக்குளிரில் கரும்பாக...... கடைந்தெடுத்த அமுதாக........ உணவு முடிந்ததும், உலர்ந்த தென்னங்குருத்தும் நிலாவெளிப் புகையிலையும் நெருப்புக் கொள்ளியும் கொணர்ந்து வைத்தாள் ஹலீமா. மனித இயந்திரத்திற்குப் புகைமூலம் சூடு காட்டுவதற்கான 'ரேக்கை'க்குத் தேவையான மூலவஸ்த்துக்கள், அவளும் பக்தாவின் தேவைகள் அறிந்த பதிவிரதை.

1) இவ்வுரைப் பகுதியில் வெளிப்படும் 'சமூகப் பண்பாடு' என்பதனை எடுத்து விளக்குக.
2) கும்பகர்ணவரம், குசேல காண்டப்பாராயணம் என்ற தொடர்களினூடாக நீர் அறிந்து கொள்வது என்ன?
3) இப்பந்தியில் இடம்பெற்றுள்ள பிரதேசத்துப் பண்புகளை விளக்குக.
4) இவ்வுரைப் பகுதியில் இடம்பெற்றுள்ள மொழிநடைச் சிறப்பினை விளக்குக.

## பகுதி - II

03) அவையறிதல் என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியுள்ளனவற்றை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

அ) பயன்தரும் வகையில் பேச விரும்புவோர் வளர்த்துக் கொள்ள வேண்டிய திறன்கள் எவை?

ஆ) அறிவுடையார் சபையில் பேசும் போது ஒருவர் கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் எவை?

இ) கேட்பவரின் திறத்திற்கேற்பவே பேசுந்திறன் பயன்படும் என்பதை எடுத்துக் காட்டுக.

ஈ) இவ்வதிகாரத்தில் காணப்படும் உவமைகளை எடுத்துக்காட்டி அவை கையாளப்பட்ட நோக்கங்களை விளக்குக.

04) முடிசூட்டு விழாவினை முன்னிட்டு அயோத்தி நகர மக்கள் மகிழ்ச்சி கொண்டது முதல் வசிட்டர் முடிசூட்டு விழா மண்டபத்திற்கு வந்தது வரையுள்ள பகுதியில்,

ஆ) விழாக் காண வந்த மக்கள் கூட்டம்

ஆ) அயோத்தி நகர மக்களின் மகிழ்ச்சிப் பெருக்கு

இ) அரசர்கள் அந்தணர்களின் வருகை

ஈ) கம்பன் கையாண்ட உவமை அணிகள்

என்பன கூறப்படுமாற்றில் உள்ள சிறப்புக்களைத் துலக்குக.

05) தேம்பாவணியின் பைதிரம் நீங்கு படலத்தில் பின்வரும் விடயங்கள் பற்றி விளக்குக.

அ) எகிப்து நாடு செல்வதற்கு சூசை தயங்கியமைக்கான காரணங்கள்

ஆ) குழந்தை இயேசுவின் பெருமைகள்

இ) வீரமாமுனிவர் மடக்கணிகளைப் பயன்படுத்தும் திறன்

ஈ) தமிழ் இலக்கிய வரலாற்றில் தேம்பாவணிக்குரிய இடம்

06) தெ. பொ. மீனாட்சி சுந்தரனாரின் 'தமிழ் செல்வாக்கு' என்ற கட்டுரையை ஆதாரமாகக் கொண்டு,

அ) இலங்கையில் இடம் பெற்றுள்ள தமிழ் செல்வாக்கு

ஆ) தாய்லாந்துப் பண்பாட்டில் இடம்பெற்ற தமிழ்ச் செல்வாக்கு

இ) தொலை கிழக்கு நாடுகளில் தமிழ்ச் செல்வாக்கு இடம்பெற்றமைக்கான காரணங்கள்

ஈ) தெ. பொ. மீனாட்சி சுந்தரனாரின் மொழிநடைச் சிறப்பு

என்பவற்றைத் துலக்குக.

07) வ. அ. இராசரத்தினத்தின் 'தாய்' என்ற சிறுகதையில்,

அ) ஒரு தாயின் உள்ளத்து எழும் மன உணர்வுகள்.

ஆ) கதையில் இடம்பெறும் மூதூர் பிரதேச மண்வாசனை

இ) கதை சொல்லப்படும் முறை

ஈ) ஆசிரியர் கையாண்ட மொழிநடைச் சிறப்பு

என்பன புலப்படுமாற்றினைத் துலக்குக.

08) பின்வருவனவற்றில் எவையேனும் இரண்டினை விளக்குக.

அ) நீண்ட பயணம் என்ற நாவலில் செ. கணேசலிங்கனின் படைப்பாக்கத் திறன்.

ஆ) சீறாப்புராணம் மழை ஆரம்பித்த படலத்தில் மழையின்மையால் இயற்கையும் உயிர்களும் அடைந்த துன்பம்.

இ) புரட்சிக் கமாலின் என் இறைவன் என்ற கவிதையில் இறைவனின் பெருமைகளும் சமயப் பொதுமையும் வெளிப்படுத்தப்படும் விதம்.

ஈ) பாரதியின் கவித்துவம் பற்றி விபுலானந்த அடிகளார் வெளிப்படுத்தும் விதம்.